Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!

இன்பம் தரும் 33 303 3003 பத்திகளை

உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்கள்:

S. V. முருகேசன் அன் சன்ஸ்

பெங்களூர்–2.

# ஈழநாடு

EELA NADU

போன் 389 National TAMIL DAILY தேசிய தினசரி தபாற் பெட்டி எண்: 49

[illegible] யாழ்ப்பாணம், பிலவ வைகாசி 4 ஆம் நாள் துல்ஹஜ் 1 (17-5-61) புதன்கிழமை இதழ் 79

# யாழ்ப்பாணம் எம். பி.

## அமெரிக்கா செல்வார்

### மே 27ம் திகதி சபைமுதல்வர் தலைமையில் தூதுகோஷ்டி

கொழும்பு, புதன்

ஜனாதிபதி கெனடியின் அழைப்பையேற்று அமெரிக்கா செல்லவிருக்கும் இலங்கைப் பார்லிமெண்ட் தூதுகோஷ்டியில் யாழ்ப்பாணம் எம். பி. திரு. அல்பிரட் துரையப்பாவும் இருப்பார்.

இம்மாதம் 27-ம்திகதி சபை முதல்வர் திரு. ஸி.பி.டி'சில்வா தலைமையில் செல்லும் இத் தூதுகோஷ்டியில் யாழ்ப்பாணம் எம். பி. உட்பட, திரு. டட்லி சேனநாயக்கா, டாக்டர் என். எம். பெரேரா, அரசாங்கப் பிரதம கொறடா திரு. ஜே. டி. வீரசேகரா, சேர். ராஸிக் பரீத் ஆகியோரும் இருப்பார்கள். திரு. அல்பிரட் துரையப்பா சமஷ்டிக்கட்சித் தலைவர் திரு. இராசமாணிக்கத்துக்குப் பதிலாகத் தூதுகோஷ்டியில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறார் எனத்தெரிகிறது.

### நிருபர்கள் அனுமதிக்கப்படுவர்

யாழ்ப்பாணம், புதன்

வெள்ளிக்கிழமை நடைபெறவிருக்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை விசேஷ கூட்டத்திற்கு நிருபர்கள் அனுமதிக்கப்படுவார்களென ஆணையாளர் அறிவித்திருக்கிறார்.

பத்திரிகை நிருபர்கள் இக் கூட்டத்துக்கு அனுமதிக்கப்படமாட்டார்கள் என்ற செய்தி ஏற்கனவே இப்பத்திரிகையில் வெளியாகியிருந்தது.

### சீனாவிலிருந்து புனித தந்தம்

கொழும்பு, செவ்வாய்

ஜூன் 10-ம் தேதி சீனாவிலிருந்து புனிததந்தம் இலங்கை வந்துசேருமென அறிவிக்கப்படுகிறது. ஆகஸ்ட் 8-ம் தேதி வரை அது காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும்.

---

### வங்கி மசோதா 3-ம் முறை நிறைவேறியது

கொழும்பு, செவ்வாய்

மக்கள் வங்கி மசோதா, ஜனப்பிரதிநிதிகள் சபையில் மூன்றாவது முறையாக நிறைவேறியது.

---

### சுபசிங்கா திரும்பினார்

கொழும்பு, செவ்வாய்

ஐ. நா. வில் இலங்கையின் விசேஷ தூதராய்க் கடமையாற்றிய திரு. டி. பி. சுபசிங்கா நேற்று கொழும்பு திரும்பினார்.

## வடக்கு, கிழக்கு கிராமச்சங்க தேர்தல்கள் ஒத்திவைப்பு

### அவசரகால நிலை முடியும்வரை மூதூர் உபதேர்தல் இல்லை

கொழும்பு, செவ்வாய்

மூதூர் எம். பி. திரு. ஏகாம்பரம் காலமானதைத் தொடர்ந்து நடைபெறவிருந்த உபதேர்தல் அவசரகாலச்சட்டம் முடிவடையும்வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. நாளை நியமனப் பத்திரம் தாக்கல் செய்வதென ஏற்கனவே ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

மன்னார், யாழ்ப்பாணம், திருக்கோணமலை மாவட்டங்களை சேர்ந்த கிராமச்சங்கத் தேர்தல்களும் ஒத்திவைக்கப்பட்டுள்ளன. இவ்விடங்களில் கிராமச்சங்க அங்கத்தினர்களின் பதவிக்காலம் ஜூன் 30-ம் தேதியிலிருந்து அடுத்த ஆண்டு ஜனவரி 31ம் தேதி வரை விசேஷ கெஸட் அறிக்கைமூலம் நீடிக்கப்பட்டுள்ளது. கீழ்க்கண்டகிராமச்சங்கங்கள் இவற்றில் அடங்கும்: சுளிபுரம், முகமாலை, புலோலி, வடக்கு மாந்தை, தெற்கு மாந்தை, மேற்கு மூலை, முசலி வடக்கு, பன்னங்கம, குச்சவெளி, கிண்ணியா, மதவாச்சி, நிலாவெளி, சாம்பல்தீவு, சாம்பூர், உப்புவெளி.

## ஜூரர்களின் ஆற்றலுக்கு நீதியரசர் சின்னத்தம்பி பாராட்டு

யாழ்ப்பாணம், செவ்வாய்

"பொதுவாகக் குறிப்பிடுமிடத்து ஜூரர்களின் தீர்ப்பு நான் எதிர்பார்த்தபடியே இருந்தது. இந்தக்கோர்ட்டில் கடமையாற்றிய ஜூரர்களின் கல்வித்தரமும், திறமையும் ஏனைய இடங்களில் இருந்ததைவிட உயர்தரமாய் இருந்ததென நினைக்கிறேன்" என நீதியரசர் என். சின்னத்தம்பி, வடமாகாண அஸைஸ் கோர்ட்டை முடித்துவைத்துப் பேசும்போது கூறினார்.

அவர் தொடர்ந்து குறிப்பிட்டதாவது:-

கிட்டத்தட்ட 3 மாதங்கள் நடைபெற்ற விசாரணையில் 25 வழக்குகளை விசாரணை செய்து முடிக்கிறோம். இதற்காக உத்தியோகஸ்தர்களுக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். கஷ்டமான சந்தர்ப்பங்களில், அவசரகால நிலை இருக்கும் சமயத்தில் அவர்கள் ஒத்துழைப்புக் காட்டினார்கள்.

பிஸ்காலுக்கு, குறிப்பாக சுப்ரீம் கோர்ட் வேலைகளுக்குப் பொறுப்பாக உள்ள அதிகாரிக்கு நான் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். தேவையான ஏற்பாடுகளை எல்லாம் அவர் மிகவும் திருப்திகரமாகவே செய்திருக்கிறார். இரண்டு நாள் முன்னறிவித்தலில் சாட்சிகளை அழைக்குமாறு நான் கேட்டுக்கொண்டதை அவர் நிறைவேற்றும் சக்தியுடனிருந்தார்.

# தெ. கொரிய ஆதிக்கத்தை

## ராணுவம் கைப்பற்றியது

### பிரதமருக்கு வீட்டுக் காவல்; நாடு முழுவதும் ராணுவச் சட்டம் பல மந்திரிகள் தப்பியோடினர்

ஸியோல், மே 16

தென்கொரியாவில் இன்றுகாலை ஏற்பட்ட திடீர்ப் புரட்சியைத் தொடர்ந்து, இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியது. அதிகாரத்தைக் கைப்பற்றிய இராணுவப் புரட்சிக் கமிட்டி, நாடுமுழுவதும் இராணுவச்சட்டத்தைப் பிரகடனப்படுத்தியுள்ளது. பிரதமமந்திரி ஜான்சாங் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டார்.

நாடு முழுவதும் கடும் தணிக்கை அமுல்செய்யப்பட்டிருக்கிறது. சமயசம்பந்தமான கூட்டங்களுக்கு மட்டுமே அனுமதியளிக்கப்பட்டிருக்கிறது.

#### பிரதமருக்கு வீட்டுக்காவல்

பல அரசாங்க உறுப்பினர்கள் காவலில் வைக்கப்பட்டிருப்பதாயும், சில மந்திரிகள் தப்பி ஓடிவிட்டதாயும் செய்திகள் கிடைத்துள்ளன. பிரதமர் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டார். புரட்சியில் சிலர் கொல்லப்பட்டனர்.

சாங் அரசாங்கத்தின்கொள்கையை எதிர்க்கும் இப்புரட்சிக்காரர்கள் அமெரிக்காவுடனும் இதர கம்யூனிஸ்ட் எதிர்ப்புநாடுகளுடனும் நெருங்கிய தொடர்பு வைத்துக்கொள்ளப் போவதாய்க் கூறியுள்ளனர். ஐ. நா. வை ஆதரிப்பதாயும் அவர்க்ள் கூறியுள்ளனர்.

இன்றுகாலை ஆயுதந்தாங்கிய இராணுவத்தினர் ரேடியோ நிலையத்தையும், இதர அரசாங்கக் கட்டிடங்களையும் கைப்பற்றினர். எதிர்ப்புக்கள் இன்றி அவர்கள் அதிகாரத்தைக்கைப்பற்றினர். ஆனால்சியோல்நகரில் அங்குமிங்கும் சில துப்பாக்கி வேட்டுக்கள் ஒலித்தன.

#### அமெரிக்கா விரும்பவில்லை

தென்கொரியாவிலுள்ள அமெரிக்கத் துருப்புகள் ஆயத்த நிலையில் வைக்கப்பட்டுள்ளன. 5 லட்சம் தென்கொரியத் துருப்புக்களின் தலைமை அமெரிக்கரிடம் இருக்கிறது. ஆனால் ஜான்சாங்கின் சட்டபூர்வமான அரசாங்கத்திடம்அதிகாரத்தை ஒப்படைத்துவிடும்படியும் சாங்கின் அரசாங்கத்தையே தாம் ஆதரிப்பதாயும் அமெரிக்கா கோரியுள்ளதாம்.

---

### ஆசிரியரை அவமதித்ததற்கு ரூபா 50 அபராதம்

திருக்கோணமலை, மே 16

"சட்டங்கள் யாவும் உனது கைக்குள்தான் இருக்கிறது என்று நினைத்துக்கொண்டு, நீ ஒருபோதும் பாடசாலை ஆசிரியர்களைத் தவறான வார்த்தைகளால் ஏசக்கூடாது. உன் குழந்தைக்கு பிரம்பினால் அடித்தது குற்றமெனத் தென்பட்டால், நீ அப்பாடசாலை அதிபரிடம் போய் இதுபற்றி முறைப்பட்டிருக்கலாம்."

இவ்வாறு குற்றவாளியாகக் காணப்பட்ட ஒருவருக்கு குறிப்புரை கூறியபொழுது நீதிபதி ஜனாப் எம். எம். அப்துல்காதர் மேற்கண்டவாறு கூறினார்.

கந்தளாவ மகாவித்தியாலயத்தில் கல்வி பயிற்றும் திரு. சி. எஸ். ஜயவர்த்தன, பெப்ரவரி மாதம் 6 ம் திகதி எட்வின் என்ற மாணவனுக்குப் படிக்காத காரணத்தினால் இரண்டுதரம் பிரம்பினால் அடித்ததற்காக தூஷிக்கப்பட்டதுடன் பயமுறுத்தலுக்கும் ஆளானார்.

சட்டத்துக்கு விரோதமான முறையில் நடந்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட கீகனேஜ்பற்றிக், அவருடைய மகன் கீகனேஜ் ஸைமன் சிங்கோ, கந்தளாய் குடியேற்றத் திட்டத்தைச் சேர்ந்த எம். எல். நன்சிநோனா ஆகிய மூவரில் முதல் இரண்டு குற்றவாளிகளுக்கும் தலா ரூபா 50 அபராதம் செலுத்துமாறு உத்தரவிடப்பட்டது. மூன்றாவது எதிரி விடுதலை செய்யப்பட்டார்.

### ஆர்ச் பிஷப் தோமஸ் கூரே பிரான்ஸ் செல்வார்

கொழும்பு, புதன்

கொழும்பு ஆர்ச் பிஷப் டாக்டர் தோமஸ் கூரே இன்று விமான மார்க்கமாக பிரான்ஸ் செல்வார்.

சால்ஸ் உஜின் டி மஜினோட்டின் நூறாவது ஆண்டு நினைவு நாளில் கலந்துகொள்வதற்காகவே ஆர்ச் பிஷப் டாக்டர் கூரே பிரான்ஸ் பிரயாணமாகின்றார்.

### இந்தியா செல்ல மாட்டார்

யாழ்ப்பாணம், புதன்

வட இந்தியாவிலுள்ள இராஜஸ்தானில் இம்மாதம் பிற்பகுதியில் நடைபெறவிருந்த அகில இந்திய பனை வெல்ல உற்பத்தியாளர் மகாநாட்டில் அகில இலங்கை காந்திய சேவா சங்கச் செயலாளர் திரு. எஸ். கே. வேலாயுதபிள்ளை கலந்துகொள்ளமாட்டாரெனத் தெரிகிறது.

---

### தீவிபத்தால் பெருமளவு கோதுமை நாசம்

பம்பாய், மே 16

பம்பாய்த் துறைமுகத்தில் அலெக்ஸாண்டிரியா தானியக் கிடங்கில் வைக்கப்பட்டிருந்த ஏராளமான அமெரிக்க கோதுமை தீ விபத்தினால் நாசமடைந்ததாக அறிவிக்கப்படுகிறது.

### மணிவாக்கு

நம்பிக்கை என்ற ஒரு சாளரத்தின் வழியாக நான் வருங்காலத்தை மகிழ்ச்சி நிரம்பிய கண்களுடன் பார்க்கின்றேன்.


# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு வைகாசி மீ 4 உ (17-5-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone: 389.


## தேசிய கல்வித் திட்டம்

தேசியக்கல்விக் கமிஷனுக்கு இலங்கையிலுள்ள ஆசிரிய சங்கங்களும், பொறுப்புள்ள வேறு சங்கங்களும் கல்வி சம்பந்தமான கருத்துக்களையும், யோசனைகளையும் எழுத்து மூலம் சமர்ப்பித்துள்ளன. அந்நிய ஆட்சியில் இலங்கை இருந்தபோது நாட்டில் நிலவிய கல்விமுறை சொந்த நாட்டின் தேவைகளைப் பூர்த்தி செய்வதாக அமைந்திருக்கவில்லை. அரசாங்கத்தில் குமாஸ்தாக்களாகக் கடமையாற்றுவதற்கு ஏற்ற வகையிலேயே அந்நாட்களில் போதனா முறைகள் இருந்துவந்தன. இன்று இலங்கை சுதந்திர நாடாக விளங்குவதால் சொந்த நாட்டுக்கு உகந்த ஒரு கல்வி முறையை வகுத்து அதனை அமுல் செய்வதே நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மை அளிப்பதாகும். இதனைக் கருத்திற்கொண்டு அரசினர் தேசியக் கல்விக் கமிஷன் ஒன்றை நியமித்திருப்பது முற்றிலும் வரவேற்கத்தக்கதே.

தேசியக் கல்விக் கமிஷன் கல்வி சம்பந்தமான புதிய திட்டங்களை வகுக்கும்போது இன்றைய போதனைமுறை பற்றி நன்கு பரிசீலனை செய்வது அவசியமாகும். இன்று நாட்டில் நிலவிவரும் போதனை முறை இயற்கைக்குச் சிறிதும் பொருத்தமில்லாதவகையில் விபரீதமாக அமைந்திருக்கிறதென்பது அறிஞர்கள் பலரின் கருத்தாகும். இதனை 'வெறும் கல்வி' எனக் கூறுவோரும் உளர். கல்வியென்பது ஒரு கடமையென்ற இயற்கைக்கு மாறான பாவனை கொள்வதைவிட அது இன்பம் என்ற இயற்கையான, உற்சாகம் நிரம்பிய உணர்வு தோன்றவேண்டும். நமது குழந்தைகளிடம் இன்று இத்தகைய எண்ணம் காணப்படுகிறதா? இன்றைய மாணவர்களிடையே கல்வியென்றால் "தண்டனை" என்ற எண்ணமே பரவியிருக்கிறது. குழந்தை சுதந்திரப் போக்குள்ளதாகக் காணப்பட்டால் போதும், மறுகணம், "இவனை இனிப் பள்ளிக்கூடத்துக்குக் கொண்டுபோய்க் கட்டிப்போடவேண்டியதுதான்" என்று கூறத் தொடங்கிவிடுகின்றனர். பள்ளிக்கூடம் என்பது என்ன? குழந்தைகளைக் கட்டிப்போடும் இடம்போலும்! அதாவது புனிதமான இப்பணியில் பங்குகொள்ளும் ஆசிரியர்கள், இம்மத்திய சிறைச்சாலையின் சிறிய, பெரிய அதிகாரிகளே என, வினோபாஜி இன்றைய கல்விமுறையைப்பற்றி நகைச்சுவையிடன் கூறியிருப்பதை இங்கு எடுத்துக்காட்ட விரும்புகிறோம்.

தேசியக் கல்விப் பிரச்சினை பற்றி வினோபாஜிகூறும்போது, இன்று அளிக்கப்படும் கல்வி கல்வியுமல்ல; அதனை அளிப்பதற்கு இப்போது கையாளப்படும் முறை உண்மையான முறையுமல்லஎன்றும், அகத்தேயுள்ளது இயல்பாகப் புறத்தே எழுந்து வருதலே கல்வியெனவும் குறிப்பிடுகின்றார். இந்தியாவை மனதிற்கொண்டு இவர் தெரிவித்துள்ள கருத்து இலங்கைக்கும் பொருத்தமானதே.

இலங்கை இன்று தேசிய அரசாங்கத்தைப் பெற்றிருப்பதால் இப்புதிய ஆட்சியில் கல்வியும் புதிய முறையில் அமைய வேண்டும். இதற்கான வழிகளையும், பாடத் திட்டங்களையும், போதனா முறைகளையும் தேசியக் கல்வி கமிஷன் நன்கு ஆராய்ந்து தொகுக்கவேண்டியவர்களாகின்றனர். போதனா முறையிற் புதுமையைப் புகுத்துவதுடன்தொழிற்கல்வியிலும் சிரத்தை செலுத்தவேண்டும். எனவே, தொழிற் கல்வியைப் புறம்பான ஓர் அம்சமாகக் கொண்டு அதற்கான ஒரு திட்டத்தையும் கமிஷன் வகுக்குமென நாடு எதிர்பார்ப்பது இயல்பே. தொழிற்கல்வியுடன் கூடவே விஞ்ஞான பாடத் திட்டம் எவ்வாறு அமையவேண்டுமென்பதிலும் கமிஷன் கருத்துச் செலுத்தவேண்டியதாக இருக்கின்றது.

போதனா முறை ஒருபுறமிருக்க, ஐந்து தொடக்கம் பதினான்கு வயதிற்குட்பட்ட நான்கு லட்சம் பிள்ளைகள் கல்வியறிவு பெற முடியாத நிலையில் இலங்கை முழுவதிலும் இருக்கின்றனர் எனத் தெரிகிறது. இவர்கள் கனிஷ்ட வகுப்புகளுக்குரிய மாணவர்கள். இவர்களுக்குக் கல்வி பயில்வதற்கான வசதிகள் இல்லாத காரணத்தினாலேயே இப்படிக் கவனிப்பாரற்ற நிலையில் இருக்கின்றனர். இவற்றையெல்லாம் கமிஷன் நன்கு கவனிப்பதுடன் தோட்டப் பள்ளிக்கூடங்களையும் தேசியக் கல்வித் திட்டத்திற் சேர்த்துக்கொள்ள வழிவகைகளை வகுக்கவேண்டும்.

'மாணவர்களாகிய நாங்கள் உலகப் பிரஜைகள்; நாமும் மனிதர்கள். நாங்கள் கல்வியை வழிபடுவோர். நடு நிலைமையிலிருந்துகொண்டு சிந்திப்பவர்கள். எங்களுக்குக் குறுகிய மனப்பான்மையில்லை. எந்தத் தனிச் சமயத்தையும் சம்பிரதாயத்தையும் கட்டிக்கொண்டு நில்லோம்' என்ற உயர்ந்த எண்ணம் மாணவர்களிடையேயும் உதிக்குமானல் தேசியக் கல்வித் திட்டம் நற்பயன் அளிக்குமென்பதிற் சந்தேகமில்லை.

# மீன்பிடித் தொழில் விருத்தி பொருளாதார வளத்துக்கு ஒருவழி

## படித்த இளைஞர்களுக்கு நல்ல சந்தர்ப்பம்

**இன்று நாம் அதிக தொகையான மீனை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்கின்றோம். மீன்பிடித் தொழிலை நாம் விருத்தி செய்வோமாயின் சுயதேவையைப் பூர்த்தி செய்வதுடன் வெளிநாடுகளுக்கும் அதனை ஏற்றுமதி செய்யலாமென இங்கு விஜயம் செய்து நிலைமையை நேரில் அறிந்த யப்பானிய வர்த்தகக் குழுவினர் தமது அறிக்கையிற் கூறியுள்ளனர். மீன் பிடித்தொழிலை விருத்திசெய்வதன் மூலம் மக்களும் நாடும் அடையக்கூடிய நலங்களை 'ஆத்திரேயன்' இக் கட்டுரையில் ஆராய்ந்துள்ளார்.**

யப்பானிய வர்த்தகக் குழு நம் நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு உதவுவதாக சில மாதங்களுக்கு முன்னர் ஓர் அறிக்கை பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. அதில் முக்கியமாக மீன்பிடித் தொழில் குறிக்கப்பட்டிருந்தது.

அவ்வறிக்கை மீன் பிடித்தலின் அவசியத்தை மிக அழகான முறையில் கூறுகின்றது. இத் தொழிலை விருத்தி செய்து நம் நாட்டிலிருந்து மீன்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய அளவிற்கு இத் தொழிலிற்கு உதவுவதாக அந்த அறிக்கை தெரிவிக்கின்றது.

இப்போது நாம் பெரும் அளவில் வெளிநாட்டிலிருந்து மீன்களை இறக்குமதி செய்து, கொண்டு வருகிறோம். இன்றைய நிலையிலுள்ள இச்சுய தேவையையும் பூர்த்தி செய்து மேல்மிச்சமாக ஏற்றுமதியும் செய்யலாம் என்னும் கூற்று வெறும் கேலியாகச் [illegible]க்குத் தோன்றலாம்.

ஆனல் கூறியவரது தகுதி என்ன என்பது ஆராயப்பட்டால், காரணமின்றி தகுந்த ஆதாரமின்றி இது சொல்லப்பட்டிருக்காது என்பது விளங்கும்.

### யப்பான் சாதனை

பழங்கால நாகரிகத்திலேயே திளைத்து மேலைநாட்டினரை நாட்டிற்குள்ளாகவே வரவிடாமல் வாழ்ந்த யப்பானியர் திடீரென்று நாற்பது வருடங்களுள் பொருள் உற்பத்தியிலும் தொழில் விருத்தியிலும் போட்டியிட்டு வெற்றியும் கண்டவர்கள். அவர்களுக்குச் சமமாய் இயந்திர சாதனங்களை உற்பத்தி செய்வோர். உழைப்பிற்கு அஞ்சாதவர்கள். இன்னும் தொலைதூரத்திலிருந்து நமது நாட்டைச் சூழ்ந்திருக்கும் கடலில் மீன்களைப் பிடிப்பவர். இத்தகையோரது கூற்று அறியாமையிலிருந்து தோன்றியிருக்காது என்பது நிச்சயம்.

நமது தீவின் கரைப் பகுதியில் கிட்டத்தட்ட மூன்றில் இரண்டு பாகம் நம் மக்கள் வசமேயிருக்கின்றது. அவர்களே மீன் பிடித் தொழிலில் ஈடுபட்டு உழைப்பவர்கள். இவர்கள் எல்லோரும் சேர்ந்து நாடு நலம்பெற, நம் பகுதி வளம்பெருக, மக்கள் சுகமடைய யப்பானிய மக்களுடன் எவ்விதமாக சேர்ந்து தொழிலைப் பெருக்கலாம் என்பதை உடனடியாக ஆராய வேண்டும்.

நம் மக்களுக்கு திடமும், ஒற்றுமையுணர்ச்சியும் நாட்டுப்பற்றும் அமோகமாகவுண்டுதான். ஆனல் இந்தச் சூழ்நிலையில் இவை நன்கு பரிணமித்தால், வெளிநாட்டு ஒத்துழைப்புடன் பெரும் திட்டமிட்டு செயலில் இறங்கலாம். இவை இல்லையாயினும் சிறுச்சிறு கூட்டுறவு ஸ்தாபனங்கள் ஏற்படுத்தி ஓரளவு நன்மையாவது பெறலாம்.

ஆனல் ஒன்றுமட்டும்நிச்சயம். நம்பகுதி என்ருவது பொருளாதார சுதந்திரம் அடையுமென்றால், அந்நாள் இந்த மீன்பிடித் தொழில், பெரும் முறையில் வளர்த்த பிறகே இருக்கும். வேறுவழிகள் எதுவும் இல்லை என்றே எனது சிற்றறிவிற்குத் தோன்றுகின்றது. மற்ற எல்லா முயற்சிகளும் தேவைதான். ஓரளவு உதவிபுரியும். ஆனல் நம்மைச் சூழ்ந்திருக்கும் வற்ருத செல்வத்தை வாரி எடுக்கவும் மக்கள் எல்லோரும் ஒருங்கே முற்பட்டால்தான் பெரும்அளவில் வளம்பெருகும்.

### எல்லோருக்கும் பொது

இறைவன், மொழி, பணம் ஆகிய இம் மூன்றுக்கும் சாதி பேதம் கிடையாது. எல்லோருக்கும் இவை பொது. படித்த இளைஞர்கள் எச்சாதியைச் சேர்ந்தவராயினும் சரி, பணம் பெறுவதற்காக, நாடு நலம் பெறுவதற்காக துணிந்து நவீன முறைகளில் வெளிநாட்டோரின் உதவியுடன் மீன்பிடித்தலில் ஈடுபட்டால்தான் நாட்டுக்கும் நமக்கும் நல்லது. இந்த மனநிலை நம்மிடம்தோன்றும் நாளே, நம்தாய்த்திருநாட்டின் பொன்னளாகும். "தருகின்றோம் பெற்றுக்கொள்ளுங்கள்" என்று கூறுபவரிடம் வசதிகளைப் பெறுவோமா? அல்லது உழைப்பிற்கஞ்சி சாதி முறை இன்னமும் பேசிக்கொண்டிருக்கப் போகின்றோமா?

பண்டைத் தமிழ்மக்கள்' இட்டார் பெரியோர், இடாதார் இழிகுலத்தோர்' என்றனர். அந்தச் சூழ்நிலைக்கு ஏற்ற கூற்று இது. அடிமை நாட்டில் வாழ்ந்து சுதந்திரக் கனவு கண்ட மறத்தமிழன் சாதிக் கட்டுப்பாடு நாட்டு வளர்ச்சிக்குத் தடையாயிருந்ததைக் கண்டு சிலசமயங்களில் வெகுண்டான். பல சமயங்களில் அழுதான். கடைசியாகத் தனது மக்களுக்கே அறிவுறுத்தினன். குலத்தில் உயர்வு தாழ்வு சொலல் தவறு என்று கூறவில்லை. தெய்வமே பொறுக்காத பாவம் என்ருர். எல்லா விதத் தொழில்களும் வளர வேண்டும் என்று கற்பனை செய்தான். இதில் உயர்ந்தது, தாழ்ந்தது; என்பதொன்றுமில்லை என்று கதறினன். வானையளப்பதும், கடல் மீனையளப்பதும் நாட்டின் நலனைப் பொறுத்தவரையில் சமமே. கலைவளர்ப்பதும், கொல்லன் உலை வளர்ப்பதும் சமமான மதிப்புடையன என்று அடித்துரைத்தான் கவிஞன்.

அந்தப் பரம்பரையில் வந்த நாம் நாடு நலம்பெற மீன் பிடித்தலை அமோகமாகப் பெருக்கவேண்டும் என்பதை அறிவளவில் ஒம்புக்கொண்டு செயலாற்றத் தயங்கினல் அப்பெரும் கவிகளின் பெயரைக் கூறக்கூட நமக்கு உரிமைகிடையாது என்று திண்ணமாகக் கூறுவேன்.

# ஆசிய நாடுகளின் மீன்பிடிமுறை: கொச்சியில் ஜேர்மன் ஆராய்ச்சி

ஹாம்பர்க்கிலுள்ள ஜேர்மன் மீன்வள ஆராய்ச்சி நிலையத்திற்கும், கொச்சியிலுள்ள மத்திய மீன்வளத் தொழில் ஆராய்ச்சி நிலையத்திற்கும் இடையே அனுபவம், அபிப்பிராயம் பற்றிய தகவல்களைப் பரிமாறிக் கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. கொச்சி நிலையத்தில்ஹாம்பர்க்கில் தயாரிக்கப்பட்ட மீன்பிடிப்பு வலைகள் பரீட்சித்துப் பார்க்கப்படும். ஹாம்பர்க்வலைகள் உஷ்ணப் பிரதேசத்திற்கு ஏற்றதா என்பதைக் கண்டறிவதே இந்த ஆராய்ச்சியின் முக்கிய நோக்கமாகும். ஆசிய நாடுகளின் தேவைகளை அறிவதற்காகவே பேராசிரியர் வான் பிராண்ட் என்பவர் தலைமையில் ஒரு கோஷ்டி ஆசிய நாடுகளுக்கு விஜயம் செய்து வருகிறது. இவர் கேரள இராச்சியத்தில் கோழிக்கோடு, கொச்சி ஆகிய இடங்களில் மீன்பிடிப்பு சம்பந்தமான சொற்பொழிவுகள் ஆற்றினர்.

பல நாடுகளிலுள்ள மீன்பிடிப்பு முறைகளை நேரில் கண்டபின், ஆசியா ஐரோப்பிய நாடுகளின் பெரும் அளவு மீன் பிடிப்பு பிரச்சினைகள் ஒன்றுடன் இன்னென்று ஒப்பிட்டுப் பார்க்கத்தக்கதல்ல என்பதை இவர் கண்டறிந்தார். ஐரோப்பிய மீன்பிடிப்புத் தொழிலில் இயந்திர சாதனம் மிக முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. ஆசிய நாடுகளில் இன்னும் இயந்திர சாதனம் தலைகாட்ட ஆரம்பிக்கவில்லை. இவருடைய அறிக்கை மூலம் மீன் தொழில் பற்றிய பல அரிய தகவல்கள் வெளிவரலாம்.

ஜேர்மன் மீன்வள ஆராய்ச்சிக் கழகத்தின் மீன் பிடிக்கும் சகல முறைகளைக் குறித்தும் ஆராய்ச்சிகள் நடத்தப்படுகின்றன. செயற்கை நார்களைக் கொண்டு நவீன வலைகளைப் பின்னுதல், வலைகள் தயாரிப்பில் அபிவிருத்தி, மீன் பிடிக்கும் சாதனங்களின் நூதன அமைப்பு ஆகியவற்றில் இக் கழகம் சிரத்தை காட்டுகிறது.

கொச்சியிலுள்ள மத்தியமீன் ஆராய்ச்சிக் கழகம் ஹாம்பர்க் கழகத்தினல் தயாரிக்கப்பட்டு அனுப்பப்படும் எந்தச் சாதனத்தையும் பரிசோதித்துத் தகவல் தெரிவிக்கும். இதனல் உஷ்ணப் பிரதேச மீன்பிடிப்புத் தொழிலுக்கு முக்கியமாக இந்திய மீன்பிடிப்புத் தொழிலுக்கு அனுகூலங்கள் ஏற்படும். இந்தியாவில் பருத்தி நூலால் ஆன வலையே உபயோகிக்கப்படுகிறது. அதைக்கூடச் சில ரஸாயனப் பொருள்களைச் சேர்த்து உபயோகிப்பதால் வலைகள் எளிதில் வீணகிவிடாதபடி பார்த்துக் கொள்ள முடியும் எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

# மட்டக்களப்பு - கொழும்பு தந்திச் சேவை

## தினமும் தடைபட்டு வருகிறது

மட்டக்களப்பு, மே 16

மட்டக்களப்பு—கொழும்பு டெலிபோன் இணைப்புக்கள் மிகவும் குறைவாகயிருப்பதால் தந்திப் போக்குவரத்துச் சேவையில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

சென்ற கிழமை தந்திப் போக்குவரத்து முற்ருக தடைபட்டிருந்தது. இதற்கு முன்பும், இச்சேவை குறிப்பிட்டளவுக்கு இன்றி சற்றுக் குறைவாகவே இயங்கியது. இதன் காரணமாக, கொழும்பில் இருந்து மட்டக்களப்புக்கும், மட்டக்களப்பில் இருந்து கொழும்புக்கும் செல்லும் தந்திகள் புகையிரத மார்க்கமாகவே அனுப்பப்பட்டு வந்தன.

தந்திச்சேவை பற்றி தபால் அதிகாரிகளிடம் விசாரித்தபோது இக் கோளாறுகள் பற்றி வரும் விசாரணைகளைப் பதிவுசெய்து வைப்பது மட்டுமே தங்களால் முடியுமென்றும் இதற்குரிய பலாபலன்கள் தந்திச்சேவை மேற்பார்வையாளரிடம்தான் தங்கியிருக்கிறதெனவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்தனர்.

## ரஷ்ய தூதர் - கெனடி சந்திப்பு

வாஷிங்டன், மே 16

அமெரிக்க ஜனதிபதி திரு. கென்னடி, இன்று வாஷிங்டனிலுள்ள ரஷ்யத் தூதரின் வேண்டுகோளின்படி அவரைச் சந்திக்கிருர். குருஷேவ் - கென்னடி சந்திப்புப்பற்றி அவர்கள் பேசக்கூடும் எனத் தெரிகிறது.

# 1963-க்குப்பின் ஜி. ஸி. ஈ. பரீட்சை

# ஒழிக்கப்படும்

## உபவேந்தருக்கு கல்வி மந்திரி அறிவிப்பு

கொழும்பு, செவ்வாய்

**1963-ம் ஆண்டுக்குப்பின் ஜி. ஸி. ஈ. உயர்தரப் பரீட்சையை ஒழித்துவிடத் தாம் தீர்மானித்திருப்பதாய் கல்விமந்திரி திரு. பதியுதீன் முகமது இலங்கைப் பல்கலைக் கழக உபவேந்தருக்குத் தெரிவித்திருக்கிருர்.**

இலங்கையில் இருக்கும் வசதியை முன்னிட்டு லண்டன் வெளிப்பட்டதாரிப் பரீட்சையை நிறுத்தவும் தாம் தீர்மானித்திருப்பதாகக் கல்வி மந்திரி தெரிவித்திருக்கிருர். லண்டன் பரீட்சையில் இன்னும் தொகையான மாணவர்கள் கலந்து கொள்வதற்குப் பதிவு செய்திருப்பதால் அதை நிறுத்துவதற்கு ஒரு குறித்த கால எல்லையை நிர்ணயிப்பது சாத்தியமில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைப் பல்கலைக்கழகம் லண்டன் பல்கலைக்கழகம் பட்டதாரி, பரீட்சைக்கான பதிவை ஏற்கத் தயாராய் இருந்தால் 1965-ம் ஆண்டுக்குப்பின் இப்பரீட்சையை நிறுத்த முடியும் எனவும் அவர் கூறியுள்ளார்.

**கல்விடைரக்டர் விளக்கம்**

ஜி. ஸி. ஈ. பரீட்சை முடிவு வெளியானபின் எச். எஸ். ஸி. பரீட்சைக்கு மாணவர்களை உயர்த்துவதில் எவ்வித சிரமமும் இல்லை என கல்வி அதிபர் திரு. எஸ். எப். டி' சில்வா கூறினர். இலங்கைப் பல்கலைக் கழகப் பிரவேச சட்டவிதிகளை கல்லூரி அதிபர்கள் பின்பற்றுவது மட்டுமே போதுமானது என அவர் கூறினர்.

விஞ்ஞானம், என்ஜினீயரிங், விவசாயம், மிருகவைத்தியம் பிரவேசப் பரீட்சை ஆகியவற்றில் சேரவிரும்பினல் 6 பாடங்களில் சித்திபெற்றிருக்க வேண்டுமென்றும், குறித்த 3 பாடங்களில் விசேஷ சித்திபெற்றிருக்க வேண்டுமென்றும் அவர் கூறினர்.

---

## சரியான முறையில் கணக்கு வைக்காத இலாகாக்கள்

### திறைசேரி துரிதநடவடிக்கை எடுக்கிறது

கொழும்பு, மே 16

வர்த்தகம், கைத்தொழில் முயற்சிகளில் ஈடுபாடுள்ள இலாகாக்கள் சரியான முறையில் கணக்குகளை வைத்துக் கொள்ளவில்லை என்று ஆடிட்டர் ஜெனரல் திரு. ஏ.எல். வீரசிங்கா செய்துகொண்ட புகாரினல் திறைசேரி துரித நடவடிக்கை எடுத்துக்கொண்டுள்ளது சரியான முறைகளில் கணக்கு விபரங்களை பரிபாலித்தல் வர்த்தக கருமங்களுக்கு வேண்டிய அடிப்படைத் தேவையென்றும் இவைகளை சம்பந்தப்பட்ட இலாகாக்கள் உடன் அனுப்பிவைக்கவேண்டுமென்றும் சகல இலாகாக்களுக்கும் திறைசேரி அறிவித்துள்ளது.

குறிப்பிட்ட சில கணக்குப் பதிவுகளைகணக்காளரோ அன்றிப் பிரதமஅதிகாரி ஒருவரோ தான் உறுதிப்படுத்தவேண்டுமென ஆடிட்டர் ஜெனரல் மேலும் அறிவித்துள்ளார்.

---

கொழும்பு, செவ்வாய்

வெளிநாட்டு சினிமாப் படங்களின் இறக்குமதித் தீர்வை குறைக்கப்பட்டால் ஒழிய சினிமாத் தொழிலை முடிவிட வேண்டி ஏற்படும் என ஜனுப் ஜபீர் ஏ. காதர் நமது நிருபரிடம் கூறினர்.

## செய்திச் சுருக்கம்

வருகிற பொதுத் தேர்தலில் சர்வோதய ஊழியர்கள் எந்தக் கட்சியையும் ஆதரித்து வாக்களிக்கமாட்டார்கள் என ஸ்ரீஜயப்பிரகாஷ் நாராயண் தெரிவித்தார்.

∴ ∴ ∴

வருகிற சனிக்கிழமை அல்ஜீரியதேசியவாதிகளுக்கும், பிரான்ஸுக்குமிடையே பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகும்.

∴ ∴ ∴

இந்தியாவின் வருடாந்த ஏற்றுமதி 600 கோடியிலிருந்து 800 கோடி ரூபாய்க்கு அதிகரிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

∴ ∴ ∴

தாகூர் பற்றி சென்னையில் ஒரு உரையரங்கு நடைபெற்றது.

∴ ∴ ∴

பிரபல நிபுணர் டாக்டர் எஸ். சந்திரசேகர், ஜெனிவா, லண்டன், பாரிஸ், ஆக்ரா, லாவோஸ் ஆகிய இடங்களில் வெளிநாட்டுக் குடியேற்றம், ஜனப்பெருக்கம் ஆதியன பற்றிச் சொற்பொழிவாற்றுவார்.

∴ ∴ ∴

பர்மாவிலிருந்து 10,000 டன் அரிசியுடன் ஒரு கப்பல் கொச்சித்துறைமுகம் வந்துசேர்ந்தது.

∴ ∴ ∴

இந்திய டென்னிஸ் வீரர் ராமநாதன் கிருஷ்ணன், மேற்கு ஜெர்மனியில் நடைபெற்ற இரு டென்னிஸ் ஆட்டங்களிலும் வெற்றியடைந்திருக்கிருர்.

∴ ∴ ∴

ஹைதராபாத்தில் செவிடர்களுக்கான முதியோர் கல்வி நிலையம் ஒன்று விரைவில் ஆரம்பிக்கப்பட இருக்கிறது.

∴ ∴ ∴

பீக்கிங் நகரில் ரவீந்திரநாத் தாகூரின் 100 வது பிறந்த தினத்தையொட்டிய விழா கோலாகலமாக நடைபெற்றது. பாரதத்தைச்சேர்ந்த மாணவர்கள் உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

∴ ∴ ∴

1962-ம் ஆண்டு நடைபெறவிருக்கும் ஒரிஸா இடைத்தேர்தலில் 533 அபேட்சகர்கள் போட்டியிடுவார்கள். இதில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் அதிகமாக இருப்பார்கள். முன்பைவிட இம்முறை பிரஜாசோஷலிஸ்டு கட்சியினரும், சுயேச்சை அபேட்சகர்களும் அதிக தொகையினராகப் போட்டியிடுவார்களெனத்தெரிகிறது.

∴ ∴ ∴

மகாராஷ்டிர புரத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டு பிரதமர் நேரு திரும்பியுள்ளார் திரு. நேரு அகமத் நகரில், கடைசி விடுதலைப் போராட்டத்திற்காக 3 ஆண்டுகள் சிறைவைக்கப்பட்டிருந்தார்.

---

## புதிய சமாதான நீதிபதி

நாவற்குளிக் கிராமச் சங்கத் தலைவர் திரு. இ. வேலாயுதர் சமாதான நீதிபதியாக சாவகச்சேரி டிஸ்திரிக் கோர்ட் நீதிபதி முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

## மன்னரில் குடிசைத் தொழில் பெருகி வருகிறது

மன்னர், செவ்வாய்

மன்னர் மாவட்டம் குடிசைக் கைத்தொழிலால் இவ்வருடம் உயர்ந்த தரத்தை எட்டியிருக்கிறது.

துள்ளுக்குடியிருப்பு, சிறுத்தோப்பு, நறுவிலிக்குளம், நாககாழ்வு, புதுக்கமம், சாவல்கட்டு, எழுத்தூர், வஞ்சியங்குளம் முதலாம் கிராமங்கள், வெங்காயக் கூடைகளையும் நாட்டுப் பாய்களையும் ஆக்கி நல்ல ஊதியத்தைக் கண்டுள்ளன.

6 அடி நீளம் 3 அடி அகலமான 2000 நாட்டுப் பாய்கள் மாதமொருமுறை இங்கிருந்து கொழும்பு உற்பத்திச்சாலைக்கு அனுப்பப்படுகின்றன. பெருந்தொகையான வெங்காயக் கூடைகள் யாழ்ப்பாண உற்பத்திச் சங்கத்துக்கு அனுப்பப்படுகின்றன.

## வரி உயர்வுக்கு எதிர்ப்பு

மன்னர் செவ்வாய்

மன்னர் பட்டின சங்க எல்லைக்குள் அடங்கிய ஏழு வட்டாரங்களிலிருந்து ஆயிரத்து ஐநூறுக்கு மேற்பட்ட வரியிறுப்போர் தம் எதிர்ப்பைக் காட்டு முகமாக மன்னர் பட்டின சபைத் தலைவர் திரு. எஸ். அல்பேர்ட் அவர்களிடம் ஒரு மகஜரைச் சமர்ப்பித்தனர்.

வீட்டு வரி, தண்ணீர் வரி சுகாதாரத்தோடு சம்பந்தப்பட்ட வரி அனுப்பப்பட்ட அறிவித்தலின்படி 100%மும் 150%மூமாக அதிகரித்ததைத் தொடர்ந்தே இவ்வெதிர்ப்பு காட்டப்பட்டது. பொதுவாக நகர மக்கள் ஏழைகளாக இருப்பதால் இவ்வரிப் பழுவைத் தாங்கக்கூடியவர்களாக இல்லை.

## தூரகிழக்கு சாரணர் வகுப்பில் இலங்கைப் பிரதிநிதி

பிலிப்பைன்ஸ், மே 16

சாரணர் தூரகிழக்குப் பயிற்சி வகுப்பில் இலங்கைப் பிரதிநிதியொருவர் கலந்து கொள்கின்ருர்.

சென்ற ஞாயிற்றுக்கிழமையன்று ஆரம்பிக்கப்பட்ட சாரணர் தூரகிழக்கு பயிற்சி வகுப்பில் 50 பயிற்சியாளர்கள் பங்கு கொள்கின்றனர்.

இவ்வகுப்பில் இலங்கைப் பிரதிநிதியாகக் கண்டியைச் சேர்ந்த திரு. ஐ. பீ. ஜீ. சந்திரசேன என்பவர் சென்றிருக்கின்ருர்.

---

மன்னர், செவ்வாய்

விடத்தல்தீவு மேற்கு சனசமூக நிலையக் கூட்டம் அந்நிலையக் கட்டடத்தில் நடைபெற்றது. நடப்பு வருடத்துக்காகப் பின்வரும் உத்தியோகஸ்தர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

அக்சராசினர் திரு. கே. பெனடிக்ற், செயலாளர் திரு. எஸ். சூசைப்பிள்ளை, தனதிகாரி திரு. ரீ. அந்தோனிப்பிள்ளை.

# எண்ணை தார்ப்பரேஷனுக்கு

## ஆள்திரட்டுதல் ஆரம்பம்

### உடனடியாக ஏழு அதிகாரிகள் தேவைப்படுவர்

கொழும்பு, செவ்வாய்

**எண்ணை மசோதா இன்னும் சட்டமாக்கப்படுவது முடிவு பெருதிருந்தும் கூட, பெட்ரோலியம் கார்ப்பரேஷனுக்கு ஆள் திரட்டும் வேலை ஆரம்பமாகிவிட்டது.**

கார்ப்பரேஷனின் ஆப்பரேஷன், விற்பனை, நிதிப் பகுதிகளுக்கு 7 உயர்தர உத்தியோகஸ்தர்களுக்கான விண்ணப்பங்கள், வர்த்தக அமைச்சினல் கோரப்பட்டுள்ளன. அத்துடன் ஒரு தொகையான அரசாங்க ஊழியர்கள் கார்ப்பரேஷன் உத்தியோகங்களுக்கு மாற்றப்படுவார்கள்.

அதற்குப்பின் ஆள் திரட்டும் நடவடிக்கை, பெட்ரோலியம் கார்ப்பரேஷன் சபை ஸ்தாபிக்கப்பட்டபின்பே நடைபெறும் இச்சபைதான், கார்ப்பரேஷனுக்கான ஆள் திரட்டுதல், சம்பளம் முதலியவற்றுக்குப் பூரண பொறுப்பு வகிக்கும்.

உடனடியாக நிரப்பப்படவிருக்கும் பதவிகள் பின்வருமாறு:-

**ஆப்ரேஷன் பகுதி**

டேர்மினல் சுப்ரீன்டன், உதவி டேர்மினல் சுப்ரீன்டன், ஆப்ரேஷன் என்ஜினியர்.

**விற்பனைப்பகுதி**

உதவி விற்பனை மனேஜர் விற்பனை என்ஜினியர்.

**நிதிப்பகுதி**

நிதி மனேஜர், உதவி நிதி மனேஜர்.

இப்பதவிகளுக்கான தெரிவுகளும், நிபந்தனைகளும் கார்ப்பரேஷன் டைரக்டர்கள் சபையினல் தீர்மானிக்கப்படும். மே 25ம் திகதி விண்ணப்பங்களின் முடிவு திகதியாகும். இலங்கைப்பிரஜைகள் மட்டுமே மனுச் செய்ய முடியும்.

## வானெலி நிகழ்ச்சிகள்

கொழும்பு

(செய்திகள்: காலை 7, பகல் 12-45, மாலை 6, இரவு 9)

புதன் 17-5-61

காலை 6-45 உதயகீதம் 6-50 சைவநற்சிந்தனை 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை 7-15 காலைக் கதிர் 7-30 திரைஇசை 8-00 புல்லாங்குழல் 8-15 இஸ்லாமிய கீதங்கள்

பகல் 12-00 சித்திரகானம் 1-00 கதம்ப இசை

மாலை 5-00 பிறந்த தின வாழ்த்துக்கள் 5-15 இளைஞர் மன்றம் 5-45 திரைஇசை 6-15 கிராமசஞ்சிகை

இரவு 7-00 நேயர் விருப்பம் 7-30 பேச்சு 8-00 வி. என். பாலசுப்பிரமணியம் — பாட்டு 8-45 இஸ்லாமிய நிகழ்ச்சி 9-15 இஸ்லாமிய நிகழ்ச்சி 10-00 கானமஞ்சரி

---

## சிங்களம் கற்கின்றனர்

கொழும்பு, செவ்வாய்

6000 க் கதிகமான அரசாங்க ஊழியர்கள் தபால் மூலம் சிங்களம் கற்க உத்தியோக மொழி இலாகா அளித்துள்ள சந்தர்ப்பத்தை பயன் படுத்தி வருவதாய் அறிவிக்கப்படுகிறது.





சிரநேத்திராஞ்சனத் தைலம்

விடுதலை அளிக்கும்போது நீங்கள்

★ சிரசு ★ கண் ★ மூக்கு

சம்பந்தமான வியாதிகளினல் துன்புறவும் வேண்டுமா?

தினமும் சிரசிலிருக்கும் இத்தைலத்தின் சக்தி நிறைந்த ஒவ்வொரு

20 சொட்டுப் பிரமாணமும்

ஆச்சரிய பலனையளிக்கும்.

காலம் நீடித்த நோயாளர்கள் எம்மிடம் தொடர்பு கொள்ளவும்.

மு. க. ஜெகநாதன்

யூனுனி கண் நிபுணர்.

பெரியகடை, யாழ்ப்பாணம்.

## வரிவிளம்பர விகிதங்கள்

ஜனனம், திருமணம், மரண அறிவித்தல், வீடு வளவு விற்பனவு, தேவை மற்றும் வாங்கவோ, விற்கவோ இது போன்ற சகல அறிவித்தல்களும் 'ஈழநாடு' பத்திரிகையில் வரிவிளம்பரம் செய்ய ஏற்றுக்கொள்ளப்படும்.

முதல் 20 வார்த்தைகளுக்கு ரூ.3-00. மேற்பட்ட ஒவ்வொரு வார்த்தைக்கும் மேலதிகமாக 10 சதம் அறவிடப்படும்.



## உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம். நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 10-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

**வைத்தியர் பரிபூரணநந்தர்,**
கைலாசபிள்ளையார் கோவிலடி.
யாழ்ப்பாணம்.



**றேடியோ**

உங்கள் றேடியோவின் தொந்தரவுகளைச் சலபமான முறையில் நீக்கிப் புதியது போல் திருத்தித் தருவதற்கு, **றேடியோ எஞ்ஜினியேர்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**



தாங்கள் விரும்பும் தகைமையுள்ள மணமகன், மணமகள் தேவையா?

விபரங்களுக்கு:
**வி. வ. நிலையம்**
160, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.



## குத்தகைக்கு காணி

வண்ணார்பண்ணை வடகிழக்கு ஆறுகால் மடத்தடியிலுள்ள, யாழ்ப்பாணம்-மானிப்பாய் றோட்டிலிருந்து பிரிந்துசெல்லும் இரண்டாவது ஒழுங்கையிலிருக்கும் மூன்றுவது காணி, நெற்பரப்பு 31, தென்னை, பனை, இரு கிணறு உள்ள காணி குத்தகைக்கு எடுக்க விரும்புவோர், கீழ்க்காணும் விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். பட்டணத்திற்கு அருகாமையிலிருப்பதனுல், பாற்பண்ணை, கோழிப்பண்ணை வைப்பதற்கு இது ஓர் உகந்த இடம்.

செ. இரத்தினசபாபதி,
இல. 64, டீல் பிளேஸ்,
கொழும்பு-3.



## "பெரும்பாடு நிவாரணி"

தாய்மாருக்கு ஒரு வரப்பிரசாதம். பெரும்பாடு, வெள்ளை இறைத்து நோயால் வருந்தும் தாய்க் குலத்தாருக்கு எட்டு நேர மருந்துடன் நிவாரணமளிக்க முடியும் என உத்தரவாதமளிக்கப்படுகிறது. நேரில் கலந்து ஆலோசிக்கவும். எட்டு நேர மருந்து ரூ. 10/- தான்.

**விபரங்களுக்கு:**

**பொ. செல்லையா**
" புற்றுநோய் நிபுணர் "
ஆயுர்வேத வைத்தியர்
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.


## ரூ. 15 கோடி நஷ்டம்

சென்னை, மே 16

புகையிரதத்தில் "டிக்கட்" இல்லாமல் பிரயாணம் செய்வதினுலும் பொருள்கள் முதலியன களவு போவதாலும் சாமான்களின் எடைகளைக் குறைப்பதினுலும் ஆண்டு ஒன்றுக்கு 15 கோடி ரூபாய் நஷ்டமேற்படுவதாக ரயில்வே துணை மந்திரி எஸ். வி. இராமசாமி கூறியிருக்கின்றூர்.

## விஷமருந்தி ஆசிரியை மரணம்

கம்பளை, செவ்வாய்

நெசவுப் பயிற்சி நிலையம் ஒன்றில் பயிற்சி அளிக்கும் ஆசிரியையான இருபது வயதுள்ள மானில் ஜே. ரி. குமாரிஹாமி என்பவர் நச்சுத்திராவகம் அருந்தி தற்கொலை செய்துகொண்டார்.

மனச்சஞ்சலம் காரணமாகத் தான் தற்கொலை செய்துகொண்டதாகக் கடிதம் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

ஒருவருட காலத்துக்குமுன் விவாகம் செய்த இவர், கினிக்த்தனையில் வேலை செய்யும் ஒரு பஸ் சாரதியின் மனைவியாவார்.

## மேயர் முனுசாமி தி. மு. க. வில் சேர்ந்தார்

சென்னை, மே 15

திரு. ஈ. வி. கே.சம்பத் ஆரம்பித்துள்ள தமிழ் தேசியக் கட்சியிலிருந்து விலகி மீண்டும் திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்துவிட்டதாக சென்னை மேயர் திரு. வி. முனுசாமி இன்று அறிவித்துள்ளார்.

இங்கு நடைபெற்ற தி. மு. க. வின் சேரி வாழ்வோர் மகாநாட்டில் பேசும்போது திரு. முனுசாமி, தான் தி. மு. க.வில் மீண்டும் சேர்ந்துவிட்டதாகத் தெரிவித்தார். தன்னுடன் விலகிய மற்ற சபை அங்கத்தினர்களும் தனது செயலைப் பின்பற்றுவார்கள் என்று திரு. முனுசாமி கூறினர்.

ஐரோப்பாவில் 9 வாரகாலம் சுற்றுப்பிரயாணம் செய்வதற்காக இன்று பகல் மேயர் திரு. முனுசாமி புறப்பட்டார். விமானநிலையத்தில் தி. மு. க. பொதுக்காரியதரிசி திரு. சி. என். அண்ணுத்துரை உட்பட பல தி. மு. க. பிரமுகர்களும் வழியனுப்ப வந்திருந்தனர்.

## சர்க்கார் மீது கெயிட்ஸ்கல் கண்டனம்

லண்டன், மே 16

போர்த்துக்கல் காலனியான அங்கோலாவுக்கு நல்லெண்ணத் தூதாக ஒரு பிரிட்டிஷ் கப்பலை அனுப்ப அரசாங்கம் தீர்மானித்திருப்பது பெரும் முட்டாள்தனம் என எதிர்க்கட்சித்தலைவர் திரு. கெயிட்ஸ்கல் கூறியுள்ளார். ஆபிரிக்கர்கள் பிரிட்டன் மீது தப்பான எண்ணம் கொள்வதற்கு இதைவிட வேறுகாரணம் வேண்டியதில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

## மண்முனையில் நல்ல விளைச்சல்

காத்தான்குடி, மே 16

மண்முனைப் பகுதியில் இம்முறை வேளாண்மைச் செய்கை நல்ல விளைவு கண்டுள்ளது இயந்திரக் கலப்பையும். செயற்கை உரமும்தான் இந்த அதிகப்படியான விளைவுக்குச் காரணம். நெல் கொள்வனவு நிலையங்கள் வழமைபோல் விவசாயிகளிடமிருந்துநெல்லைப் பெற்று வருகின்றன. தனிப்பட்ட வியாபாரிகள் விவசாயிகளிடமிருந்து உத்தரவாதத் திட்டத்திலும் பார்க்கக் குறைந்த விலைக்கே நெல் பெறுகிறூர்கள்.

# மூடும் நிலைமையில் அரசாங்க ஆஸ்பத்திரி

## மருந்து இல்லாததே காரணம்

ஜாஎலை, மே 16

"அத்தியாவசியமான மருந்துவகைகளை உடனே அனுப்பாவிடில், இன்னும் இரண்டு வார காலத்திற்குள், ஜாஎலை ஆஸ்பத்திரியையும் மருந்துச் சாலையையும் மூடிவிடவேண்டி நேரிடும்."

இவ்வாறு, ஜாஎலை பட்டின சபை அங்கத்தவரான திரு. அலோய் வாஸ் பட்டின சபையின் மாதாந்தக் கூட்டத்தின் போது ஏனைய அங்கத்தவர்களுக்கு எச்சரிக்கை செய்துள்ளார்.

திரு. வாஸ் தொடர்ந்து பேசுகையில் சென்ற இரு மாதங்களாக இந்த ஆஸ்பத்திரிக்கு எவ்வித மருந்தும் அளிக்கப்படவில்லை என்றும், ஆனல் நாளாந்தம் நோயாளர்களின் தொகை அதிகரித்து வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

28 கிராமங்களுக்கான தேவைகளை இந்த ஆஸ்பத்திரி நிறைவேற்ற வேண்டியிருக்கிறது.

நடப்பு நிதி ஆண்டின்படி, ரூபா 27,000தொகை தேவைப்படுவதாக ஜாஎலை வட்டார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். ஏ. கருணநாயக்கா, அரசாங்கத்துக்கு அறிவித்திருந்தார். இத்தொகையில் ரூபா 8,000 மட்டுமே அரசாங்கம் கொடுக்கத் தீர்மானித்துள்ளது.

## நீக்ரோவுக்கு எதிராக மீண்டும் கலகம்

அலபாமா, மே 16

அமெரிக்காவின் தென் பகுதியிலுள்ள அலபாமாவில் பஸ் நிலையமொன்றில் நீக்ரோக்களுக்கும் வெள்ளையர்களுக்கு மிடையே நிறவெறியின் காரணமாக மீண்டும் கைகலப்புகள் மூண்டுள்ளன. அனிஸ்டான் என்னுமிடத்தில் நீக்ரோக்கள் பிரயாணம்செய்த ஒரு பஸ்மீது வெள்ளையர்கள் தீவைத்துவிட்டனர். ஆனல் நீக்ரோக்கள் அதிலிருந்து குதித்துக் காயத்துடன் தப்பினர். அவர்கள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பர்மிங்ஹாமிலும் நீக்ரோக்களுக்கும் வெள்ளையர்களுக்கும் இடையே சண்டை ஏற்பட்டது.

தென்னபிரிக்கப் பிரதமர் டாக்டர் வெர்வூட்டுக்கு இரண்டு விபரல் கட்சித் தலைவர்கள் எழுதியுள்ள கடிதத்தில் பிரதமரின் கறுப்பர் விரோதக் கொள்கையினல், உலக சரித்திரத்தில் அவர் ஹிட்லரைப் போன்ற கொடுங்கோன்மையினராக வருணிக்கப்படுவார் எனக் கூறியுள்ளனர்.

## மரத்தில் தொங்கிய பிரேதம்

### தற்கொலை எனத்தீர்ப்பு

முள்ளியவளை, மே 16

குமாரபுரத்துக் காட்டிலே மாடுதேடிச்சென்றவர்கள், பழுதடைந்த நிலையிலே ஒரு பிரேதம் மரத்தில் தொங்கிக் கொண்டிருப்பதைக் கண்டு, கிராமத்தலைவருக்குத் தெரிவித்தனர். பொலிசார் ஸ்தலத்துக்கு அழைக்கப்பட்டனர்.

விசாரணையின்போது, காலஞ்சென்றவர், மட்டக்களப்பு மீருவோடையைச் சேர்ந்த ஜனப் ஆ. அபூபக்கர் என்றும், தண்ணிர் முறிப்பு என்னுமிடத்தில் வேலை செய்துகொண்டிருந்தவர் என்றும் தெரியவந்தது. தமக்குஏற்பட்ட கஷ்டங்கள் காரணமாகவே தான் தற்கொலை செய்துகொள்வதாகக் காலஞ்சென்றவரால் எழுதப்பட்ட கடிதம் ஒன்றிலே கண்டிருந்தது. மரண விசாரணை நடத்திய திரு. கோ. குட்டித்தம்பி, தற்கொலை எனத்தீர்ப்பளித்தார்.

## 258 உயர் நீதிமன்ற நியமனங்கள்

புதுடில்லி, மே 16

இந்தியாவில் கடந்த 10 ஆண்டுகளில் உயர்நீதிமன்றங்களுக்கு 258 நியமனங்கள் செய்யப்பட்டிருப்பதாகவும் இவற்றில் ஒரு நீதிமன்றதைத் தவிர இதர நியமனங்கள் அனைத்தும் பிரதம நீதிபதியின் சிபார்சின் பேரிலேயே செய்யப்பட்டதென்றும் அறிவிக்கப்பட்டது. 15 நியமனங்களில் மட்டும் அதிகாரிகளுடன் கருத்துவேற்றுமை ஏற்பட்டதாயினும் பிரதம நீதிபதியின் ஆலோசனைப்படி இவ்விஷயம் தீர்க்கப்பட்டது.

1950ம் ஆண்டு முதல் 22 நியமனங்கள் செய்யப்பட்டன. இவை பிரதம நீதிபதியின் சிபார்சின் பேரிலேயே செய்யப்பட்டன.

## தண்ணீரூற்றுச் சனசமூக நிலையம்

### உத்தியோகத்தர் தெரிவு

முள்ளியவளை, மே 16

"இக்கட்டடத்தைத் திருத்துவதற்கும் மற்றும் விஷயங்களுக்கும் எம்மோடு நீங்கள் ஒத்துழைப்பீர்களென நம்புகிறேன்" இவ்வாறு தண்ணீரூற்றுச் சனசமூக நிலையத்தின் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்ட திரு. ச. தங்கராசா தமது நன்றியுரையிற் கூறினர்.

இங்கு நடைபெற்ற பொதுக் கூட்டத்தின் போது செயற்குழு உறுப்பினராகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: திரு. ச. தங்கராசா, துணைத்தலைவர்: திரு. பொ. விசுவலிங்கம், செயலாளர்: திரு. நா. இரத்தினராசா, துணைச்செயலாளர்: திரு. வி. ஜெயபாலன், பொருளாளர்: திரு. த. செல்வத்துரை, செயற்குழு உறுப்பினர்: திரு. பா ஆறுமுகம், அ. உசனர் மரைக்காயர், க. தங்கராசா, ச. வேலுப்பிள்ளை.

## காபூல் அரசினருக்கெதிராக சதி நடவடிக்கை

காராச்சி, மே 16

ஆப்கான் ஜனநாயகவாதிகள் தாராபாண்ட் அருகேயுள்ள பெட்ரோல் நிலையம் ஒன்றை வெடிவைத்துத் தகர்த்ததால் ஆப்கான் காவல் வீரர்கள் பலர் கொல்லப்பட்டதாகப் பத்திரிகைச் செய்தி ஒன்று கூறுகின்றது. இதர பகுதிகளில் காபூல் அரசினருக்கு எதிராகச் சதிச்செயல்கள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன என்றும் இச்செய்தி கூறுகின்றது.

மன்னர், செவ்வாய்

மருதமடுத் திருப்பதியின் புனிததலத்துக்கு வண. அல்பிரட் முய்யெ சுவாமியாரவர்கள் செட்டிகுள மிசாமிலிருந்து பங்குக்குரவராக மாற்றம் செய்யப்பட்டதைத்தொடர்ந்து இங்குள்ள வண. கிறிஸ்ரி செல்வரத்தினம் சுவாமியார் யாழ்ப்பாண கத்தோலிக்க சபைக்கு மாற்றப்பட்டுள்ளார்




**பற்றறிகள்**
சார்ச் செய்தும்
பழுது பார்த்தும்
உத்தரவாதத்துடன்
கொடுக்கப்படும்
**முருகன் எலக்ட்றிக்கல் ஸ்ரோர்ஸ்**
6/8, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.



அழகிய பெனியன்! கால்மேஸ்!!
**"லேடன்"** தயாரிப்பு
யாழ்ப்பாணத்தில் உற்பத்தியாகின்றன!
பல தினுசுகள்! பல அளவுகள்!!
எங்கும் கிடைக்கும்.

Leyden
L.I.L

**இன்றைய தேவை: சுதேசிப் பொருள் ஆதரவு!**

அதற்கு வழி "லேடன்" பெனியன்கள் கால்மேஸ்களை அணிவதே.

உறுதியிலும் உயர்ச்சியிலும் மேனட்டு பெனியன்களையும், கால்மேஸ்களையும் மிஞ்சியது "லேடன்" பெனியன்களும், கால்மேஸ்களும்

தொழிற்சாலை
7, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

# பங்கீட்டு அரிசிக்கு தீவு முழுவதும் ஒரே விலை

## 34 வருடம் பணிசெய்துவரும் இலங்கை யானை

ஹாம்பர்க் மே 16

இலங்கையிலிருந்து 34 வருடங்களுக்கு முன் மேற்கு ஜேர்மனிக்கு வந்த "மேனி" என்கிற 70 வயதுள்ள யானை பல நாடுகளில் அரும்பெரும்சேவை செய்துள்ளது. ஹாம்பர்க்கிலுள்ள ஹாகன்பெக்மிருகக்காட்சி சாலையில் இது 34 வருடங்களாக இருந்து வருகிறது. இந்தப் பெண் யானை இலங்கையிலிருக்கும் போது கடும் உழைப்புக்கு பழக்கப்பட்டிருந்தது. ஹாம்பர்க் மிருகக்காட்சிச்சாலையில் பிராணிகள் தங்குவதற்கான தனி இடங்களை அமைக்கவும், மரங்களை அகற்றவும் இந்த யானை உபயோகிக்கப்பட்டது.

உலக கண்காட்சி பாரிஸ் நகரில் நடைபெற்றபோது இந்த யானை அங்கு அனுப்பப்பட்டது. ஜப்பானுக்கு ஒரு சர்க்கஸ் கோஷ்டியுடன் இந்த யானை அனுப்பப்பட்டது. ஹகாடா என்ற இடத்தில் கடும் புயலில் சர்க்கஸ் கூடாரம் வீழ்ந்து விட்டபோது இந்த யானையின் சேவை தேவைப்பட்டது. சீனு இந்தியா, எகிப்து, ஸ்பெயின், ஆகிய நாடுகளிலும் இந்த யானை அரிய சேவை செய்துள்ளது. ஆர்ஜென்டினுவில் வெள்ளத் சேதம் ஏற்பட்டபோது இது உதவியது.

இரண்டாவது உலக யுத்தத்தின் போது குண்டு வீச்சால் மிருகக்காட்சிச் சாலையில் இருந்த மிருகங்களில் 60 சத விகிதம் மாண்டு விட்டன. ஆனல் "மேனி" மட்டும் உயிர் தப்பியது. அந்தக் குண்டு வீச்சு சேதங்களை அகற்ற அது பணிபுரிந்தது.

ஹாகன்பெக் மிருகக்காட்சி சாலை, பிறநாடுகள் தங்கள் மிருகக்காட்சிச் சாலையை அமைக்கப் பின்பற்ற வேண்டிய ஒரு 'மாதிரிஅமைப்பு' காட்சிச்சாலையாகும்.

---

## மணப்பெண் ஒன்று மாப்பிள்ளைகள் மூவர்!

ஜோத்பூர், மே 16

ஜோத்பூரில் மூன்று மாப்பிள்ளைகள் ஒரு பெண்ணை விவாகம் செய்யக் காத்துக் கொண்டிருக்கின்றனர். இந்த மாப்பிள்ளைகளின் கோஷ்டியினரும் அவர்களுடன் இருக்கின்றனர்.

தனது மகளை மணம்செய்து கொடுப்பதற்காகப் பெண்ணின் தந்தை இம் மூன்று மாப்பிள்ளைகளிடமிருந்தும் தனித்தனியாகப் பரிசுப் பணம் பெற்றிருந்தார். அவர் இப்போது தலைமறைவாக இருக்கின்றூர். இத் திருமணம் சென்ற வியாழக்கிழமை நடைபெற்றிருக்க வேண்டும்.

மற்றவர்கள் அறிந்துகொள்ளாமலே தனித்தனியே வந்து சேர்ந்த மாப்பிள்ளைகள் இப்போது பேந்தப் பேந்த விழித்துக்கொண்டிருக்கின்றனராம்!

---

## கண்ணகி கோவிலில் கோவலன் கூத்து

முள்ளியவளை மே 16

பிரசித்திபெற்ற கண்ணகி கோவில்களுள் ஒன்றுன, வற்ருப்பழைக் கண்ணகி கோவில் முன்றலில், கோவலன் கூத்து நடைபெற்றது. நாட்டுக் கூத்து வகையில் ஆடப்பட்ட இக் கூத்து, முள்ளியவளை பழைய குடியிருப்புப் பகுதியினரால் நடாத்தப்பட்டது.

## காணிக்கச்சேரி பின்போடப்பட்டது

முள்ளியவளை மே 16

ஒட்டுசுட்டான், கற்சிலைமடு, பிராமணர் குளம், கூழா முறிப்பு, கருவேலங்கண்டல் பகுதிகளிலுள்ள 100 ஏக்கர் மானவாரி நெற்காணிக்கும் குடிநிலக் காணிக்குமான காணிக் கச்சேரி, நேற்று ஒட்டு சுட்டானில் நடைபெற்றது. 300 பேர் விண்ணப்பித்திருந்தனர். தெரிவுசெய்யப்பட்ட காணி போதாமையால் காணிக் கச்சேரியை ஒத்தி வைப்பதாகக் காணி கொடுக்கும் உத்தியோகத்தர் அறிவித்தார். போதிய காணியைதெரிவுசெய்து கொண்டு இன்னொரு திகதியில் காணி கொடுபடும் என்றும் அவர் கூறினர்.

---

## 'வெறுங் கையோடு கொழும்பு சென்ற ஆசிரியர்'

### மெயில் வண்டியில் களவு

யாழ்ப்பாணம், புதன்

நெல்லியடி கரவெட்டியைச் சேர்ந்த கொழும்பு பெற்ரு சிற்றிக் கல்லூரி ஆசிரியரான திரு. வி. ஆழ் வாப் பிள்ளை சென்ற சனிக்கிழமை புகையிரத மூலம் கொடிகாமத்திலிருந்து கொழும்புக்குப் பிரயாணம் செய்த போது அவரது பொருள்கள் களவாடப் பட்டு விட்ட தாகத் தெரிகிறது, இச்சம்பவம் அநுரதபுரத்திற்கும் மாகோ புகையிரத நிலையத் திற்கு மிடையில் நடை பெற்றதாகச் சொல்லப்படுகிறது.

இவ்வாசிரிய ரின் பணமும் புகையிரதப் பிரயாணச் சீட்டும் களவாடப்பட் டன, நண்பர்கள் சிலரது உதவியால் மாகோவில் புதிய பிரயாணச் சீட்டைப் பெற்ற இவ்வாசிரியர் வெறுங் கையோடு கொழும்பு சென்றிருக்கிருரெனத் தெரிகிறது.

---

## கசையடி தண்டனை அவசியம்

### பிரிட்டனில் புதிய இயக்கம்

லண்டன், மே 16

பலாத்காரக் குற்றங்கள் செய்தவர்களுக்குக் கசையடி கொடுக்கவேண்டுமென்பது பிரிட்டனில் முன்னர் அமுலிலிருந்தது. இத்தண்டனை முறை மீண்டும் அமுல் நடத்த வேண்டுமென பலாத்கார எதிர்ப்புச் சங்கம் என்ற புதிய சங்கம் ஒன்று கேட்டுள்ளது, இச்சங்கத்துக்கு 50 இலட்சம் அங்கத்தினரைச் சேர்க்க முயற்சி செய்யப்படுகின்றது.

கசையடி அவசியமா என்பது பற்றி பார்லிமென்டில் விவாதம் ஏற்படவிருக்கும் இச்சமயத்தில் இந்த இயக்கம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

---

## ஜெனிவா மகாநாடு ஆரம்பம்

ஜெனிவா, மே 16

லாவோஸ் சம்பந்தமான 14 நாடுகள் மகாநாடு இன்று ஜெனிவாவில் நடைபெறுகிறது. மகாநாடு ஆரம்பிப்பதற்கு திரு. கிருஷ்ண மேனனும், பிரிட்டிஷ் வெளிநாட்டு மந்திரி ஹியூம் பிரபுவும் பெரிதும் காரணமாய் இருந்ததாகக் கூறப்படுகிறது. தாய்லாந்தும் தென்வியட்னமும்மகாநாட்டில் பங்குபற்றுவது சந்தேகம் என்றும் கூறப்படுகிறது.

கொழும்பு, மே 16

இனிமேல் பங்கீட்டு அரிசி ஒரே அளவு விலைக்கு தீவுமுழுவதும் விற்கப்படலாம் எனத் தெரிகிறது.

விலை நிர்ணய வித்தியாசத்தை விளக்கி நாடுபூராவும் ஒரே மாதிரியான விலைக்கட்டுப்பாட்டை வைக்குமாறு உணவுக் கமிஷனர் திரு. ஆர். எல். ஆர்னேல்டா உணவு வர்த்தக அமைச்சுக்குச் சிபார்சு செய்திருக்கிருர்.

ஒருகொத்து அரிசியின் விலை 25 1/2 சதமாக நிர்ணயிக்கப்பட்டும், யாழ்ப்பாணத்திலும், கொழும்பிலும் 30 சதமாகவும் மற்றைய இடங்களில்25 தொடக்கம் 30 சதம்வரை இருப்பதாகவும் கமிஷனர் மேலும் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வித வித்தியாசம் புகையிரத லொறி ஏற்றுமதித் தீர்வைகளினலேயே ஏற்படுகிறதெனவும் விளக்கம்கொடுத்திருக்கிருர்.

---

## என். கியூ டயஸ் நிரந்தரக் காரியதரிசி

கொழும்பு, செவ்வாய்

பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் பதில் நிரந்தரக் காரியதரிசியான என். கியூ டயஸ் தற்காலிக நிரந்தரக் காரியதரிசியாக நேற்றுப் பொறுப்பு ஏற்றுள்ளார்.

நிரந்தரக் காரியதரிசியான திரு. எம். எவ். டி. எஸ். ஜெயரத்தின பதவி ஓய்வுபெற விருப்பதைத் தொடர்ந்து அவர் ரஜாவில் சென்றுள்ளார்.

மன்னுர்

## சிறுநாவற்குளம் வழக்கில் எதிரி விடுதலை

யாழ்ப்பாணம், புதன்

முனியாண்டி கோபால் என்பவரைக் கொலை செய்ததாக குற்றஞ்சாட்டி முத்து வெள்ளைச்சாமி என்பவர் மீது யாழ்ப்பாணம் சுப்ரீம் கோர்ட்டில் தொடரப்பட்ட வழக்கில் நீதியரசர் என். சின்னத்தம்பி வழக்கைத் தள்ளுபடி செய்து எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

யாழ்ப்பாணம் சுப்ரீம் கோர்ட்டை கலைத்து வைத்த நேற்றையதினம் எடுத்துக் கொள்ளப்பட்ட கடைசி வழக்கு இது வாகும்.

இவ்வழக்கில் மன்னுர் மாவட்டத்தைச் சேர்ந்த சிறுநாவற்குளம் என்னுமிடத்தில் 1960ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30-ம் திகதி முனியாண்டி கோபால் என்பவரை கொலை செய்ததாக முத்து வெள்ளைச்சாமி என்பவர் மீது இவ்வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

முடிக்குரிய வழக்கறிஞர் திரு. எஸ். சிவராசா வழக்கை நடத்தினர்.

எதிரியின் சார்பில் திரு. சி. டி. நவரத்தினம் திரு. பாலவடிவேல் ஆகியோரின் அனுசரணையுடன் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன் ஆஜராகியிருந்தார்.

எதிரியும் அவரது பிள்ளைகளும், மருமகன் குழந்தைவேலு என்பவரும் வவனியாவிலிருந்து மன்னுருக்கு மோட்டார் வாகனமொன்றில் சென்றுகொண்டிருக்கும் போது இறந்தவர் இவர்களைச் சந்தித்து அவர்களுடன் மோட்டாரில் ஏறிச் சென்றதாகவும் இறந்தவரும் எதிரியும் பிரயாணத்தின்போது சாராயம் பருகினுர்களென்றும் அப்பொழுது இருவரும் கடுமையான வார்த்தைகளைப் பரிமாறிக்கொண்டதுடன் அடிபட்டார்களென்றும் முடிக்குரிய தரப்பில் வாதிக்கப்பட்டது.

விசாரணை முடிவில் எதிரி குற்றவாளியல்ல என்று ஜூரர்கள் ஏகமனதாகத் தெரிவித்தனர். நீதியரசர் வழக்கைத் தள்ளுபடி செய்து எதிரியை விடுதலை செய்தார்.

---

## ஆத்மசாந்திக்குப் பிரார்த்தனை

மன்னுர், செவ்வாய்

வண. பிதா லோங் அவர்களின் ஆன்மசாந்திக்காகத் துக்கப்பாடற் பூசையொன்று மன்னுர் புனித செபஸ்தியார் கோவிலில் நிறைவேற்றப்பட்டது. சம்பத்திரிசியார் கல்லூரியின் பழைய மாணவர்களும் பங்குக் கிறீஸ்தவர்களும் அவருக்காகப் பக்தியோடு வேண்டிக் கொண்டனர்.


யாழ்ப்பாணத்தில் ஓர் புதிய சாதனை!

3x8½

உங்கள் காப்பியின் தரம்,
குணம், மணம்,
எந்நாளும் ஒரேவிதமாக அமைகிறதா?

இதோ நாங்கள் பெரும் பணச்செலவில்
தருவித்துள்ள நவீன

எலக்ரிக் ரேஸ்டர்

மூலம்

14 ருத்தலுக்குக் குறையாமலும் அதற்கு மேலும்
உங்களுக்குத் தேவையான காப்பியை வறுத்து
அரைத்து அரை மணி நேரத்தில் குணம், மணம்
நிறைந்த காப்பித்தூளைத் தருகிறேம்.

ஒரு முறை பரீட்சித்துப் பாருங்கள்!

குறைந்த செலவில் குறித்த நேரத்தில்
காப்பித்தூள் தயாரிக்கப்படுகிறது !

Mohamedally Abdulally
முகம்மது அலி அப்துல் அலி

5 & 7, பெரியகடை, யாழ்ப்பாணம்.

போன்: 515

# எண்ணெய் மசோதாவினல் ஏற்பட்டுள்ள கஷ்டம்

## "பெயரளவில்தான் இது பௌத்தநாடு"

### கல்வி உதவி அமைச்சர் கருத்து

நாரம்மல, செவ்வாய்

"இலங்கை ஒரு பௌத்த நாடென உலகு எங்கணும் புகழ்பரப்பியிருப்பினும், எங்கள் மக்களில் அநேகருக்குப் புத்த மதத்தைப்பற்றிப் போதிய ஞானம் கிடையாது. இது காரணமாகவே நாட்டில் கேடுகளும் கொடுமைகளும் பெருகிவருகின்றன" இவ்வாறு கல்வி உதவி அமைச்சர் திரு. வி. ரி. ஜி. கருணரத்ன இற்றனவத்த மஹா வித்தியாலயத்தில் நடைபெற்ற விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசும்போது குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசும்போது, பௌத்தமதத்தின் போதனைகளின்படி மக்கள் ஒழுகுவார்களாயின் நாட்டில் பொலிஸ் படைகளும் நீதிமன்றங்களும் இருக்கவேண்டியதில்லை என்றார்.

வாரியப்பொல எம். பி. திரு. ஏ. அதிகாரி பேசுகையில் அரசாங்கம் பெரிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் கவனத்தைச் செலுத்திக் கொண்டிருப்பதால், சிறிய விஷயங்களில் அக்கறை காட்டாது இருந்திருக்கலாம் எனக் குறிப்பிட்டார். அரசாங்கம் சகல பிரச்சினைகளையும் காலகதியில் தீர்த்து வைக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

---

## சரித்திரக் கதைகள் நாடக உருவம்

### வாணி கழகத்தின் புதிய திட்டம்

உடுப்பிட்டி, செவ்வாய்

"தமிழினத்துக்கு விழிப்புணர்ச்சி யூட்டிவந்துள்ள, "பூதத்தம்பி" "சங்கிலியன்" முதலிய சரித்திரக் கதைகளுக்கு நாடக உருவங் கொடுத்து தமிழ்ப் பிரதேசங்களில் இலவசமாகக் காட்டும் முயற்சியை கரவெட்டி வாணி கலைக் கழகம் மேற்கொள்ளவிருக்கிறது" இவ்வாறு கழக நிர்வாகஸ்தருள் ஒருவரான பண்டிதர் திரு. கே. வீரகத்தி தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிப்பதாவது:- "நெப்போலியனைப்பற்றியும் அலெக்சாந்தரைப் பற்றியும் தெரியுமளவுக்கு சங்கிலியன், பூதத்தம்பி ஆகியோரைத் தமிழ்மாணவர் அறியாதிருப்பது மிகவும் வருந்தத் தக்கது. அக்குறையை நிவர்த்திக்கும் பணியை நாம் அவசியம் மேற்கொண்டேயாக வேண்டும்"

---

## மாங்குளத்தில் காணிக்கச்சேரி

முள்ளியவளை, மே 17

அம்பகாமம், புலுமச்சிநாதிகுளம், ஒலுமடு, கூழாமோட்டைக் குளம் பகுதிகளிலுள்ள மானாவாரி நெற்காணிகளை, ஒலுமடுக்கிராம விதானையின் பகுதிகளிலுள்ள மக்களுக்குப் பகிர்ந்தளிப்பதற்கான காணிக்கச்சேரி, இன்று மாங்குளம் வாடிவீட்டில் நடைபெறும்.

---

## ரஷ்யர் வரைந்த ரவீந்திர சித்திரம் அன்பளிப்பு

புதுடில்லி, மே 16

ரஷ்யாவின் தலைசிறந்த சைத்ரீகரான மாடம் அகஸ்டிரு வரைந்த ரவீந்திரநாத தாகூரின் ஓவியம், இன்று புதுடில்லியில் ரஷ்யத் தூதரால் அன்பளிப்புச் செய்யபபட்டது.

## ஏற்பட்டுள்ள கஷ்டம்

கொழும்பு, மே 16

சனப்பிரதிநிதிகள் சபையில் நிறைவேற்றப்பட்ட எண்ணெய்த் திருத்த மசோதாவினல் போக்குவரத்து வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் பெரிதாகப் பாதிக்கப்படலாமெனக் கூறப்படுகிறது. இச் சட்டம் அமுலாக்கப்படும் பட்சத்தில் தங்கள் கடைகளை மூடப் போவதாக கொழும்பிலுள்ள பெரிய வியாபாரிகள் சிலர் தெரிவித்துள்ளனர்.

டீசல் எண்ணெய் உபயோகிக்கும் வாகனங்களின் மேல் அதிக வரியை அறவிட இப் புதிய சட்டம் வகை செய்கிறது.

1936ம் ஆண்டில் பிரகடனப்படுத்தப்பட்ட எண்ணெய் வரி விதிப்புச் சட்டத்தில் டீசல் எண்ணெய் இறக்குமதித் தீர்வை அறவிடப்பட அனுமதிக்கப்படவில்லை. இதனை உபயோகிக்கும் தொழிற்சாலைகள் தடங்கலின்றி நடைபெறும் பொருட்டே இவ்வாறு செய்யப்பட்டிருந்தது.

அதேவேளையில் [illegible] எண்ணெயை உபயோகிக்கும் லொறி, பஸ் ஆகியவற்றுக்கு ஒவ்வொருமாதமும் ரூபா 77 தொடக்கம் ரூபா 168 வரை அரசாங்கத்துக்கு வரியாகச் செலுத்த வேண்டுமென இருந்தது. 1946-ல் இத்தொகை ரூ. 86லிருந்து ரூ. 188வரை என மாற்றப்பட்டது.

சுங்கத் தீர்வையை இந்த வித எண்ணெய் இறக்குமதிகளின்மேல் அறவிடுவதற்கான சட்டத்தை அரசாங்கம் ஜூலை 1956-ல் கொண்டு வந்தது. அப்பொழுது 90 சதத்திலிருந்து ரூ. 1-10 சதத்திற்கு உயர்ந்தது. இதனல் ஏற்றுமதியாளர்கள் இவ்வரியைக் கொடுக்க மறுத்தனர்.

இன்றுள்ள புதிய சட்டப்படி அரசாங்கம் இப்புதிய வரியை அறவிட அனுமதியளிக்கிறது.

---

## பிரார்த்தனையின் பின் அறிவியல் அரங்கு

உடுப்பிட்டி, செவ்வாய்

வதிரி அர்ச் அந்தோனியார் கோவில் கட்டளைக் குரு. வண. பிதா.ஜே.ஏ.கருணகரர், பிரதி ஞாயிறு தோறும் ஆலயப் பூசை நடைபெற்ற பின் பலரும் பங்கு பற்றிக் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ள வேண்டுமென்ற நோக்கத்துடன் ஒரு கருத் தரங்கை ஆரம்பித்துள்ளார். இவ் வரங்கில் ஏராளமான வாலிபர் அரசியல், சமய, சமூக விஷயங்களைப் பற்றி மிகவும் சுவையுடன் விவாதித்து வருகின்றனர்.

---

## சப்பரத் திருப்பணி வேலைகள் பூர்த்தி

ஊர்காவற்றுறை, செவ்வாய்

நாரந்தனை-சரவணை ஸ்ரீகந்த சுவாமி கோவிலுக்கு "சப்பரம்" ஒன்று செய்யும் திருப்பணி வேலைகள் அநேகமாக பூர்த்தியடைந்து விட்டன.

இக் கோவிலின் ஒன்பதாம் திருவிழா உபயகாரரான சரவணைப் பொதுமக்கள் சார்பாக திரு. சி. சுப்பிரமணியம் இதற்கான முயற்சிகளை மேற்கொண்டார். சைவ மக்கள் பலரின் நிதி உதவியைப் பெற்று சப்பரத் திருப்பணி வேலைகள் நடைபெற்றன.

---

## பட்டீல் ரஷ்யாபுறப்பாடு

புதுடில்லி, மே 16

இந்திய உணவு மந்திரி திரு. எஸ். கே. பட்டீல் இன்று காலை புதுடில்லியிலிருந்து ரஷ்யாவுக்குச் சென்ருர். பிரிட்டன் அமெரிக்கா ஆகிய நாடுகளில் சுற்றுப்பிரயாணம் செய்யவிருக்கும் அவர் ஜூலை 4-ந் திகதி இந்தியா திரும்புவார்.

## இலங்கைக்கு 39,900,000 நாணயங்கள்

லண்டன், மே 16

பிரித்தானியா ரோயல் நாணயச் சாலை, சென்ற ஆண்டில் 707,252,329 நாணயங்களை வார்த்தார்களெனவும் இதில் 39,900,000 நாணயங்கள் இலங்கை நாட்டுக்கானவை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது பற்றி விசாரித்தபோது நாணயங்கள் தயார் செய்யும் ஒருவர், "நாங்கள் இலங்கைக்காக 4,500,000 ஐம்பது சதநாணயங்களையும், 4,000,000, இருபத்தைந்து சத நாணயங்களையும் 5,200,000 பத்து சத நாணயங்களையும், 11,000,000 ஐந்து சத நாணயங்களையும், 15,200,000 இரண்டு சத நாணயங்களையும் வார்த்து சென்ற வருடம் அனுப்பியுள்ளோம் எனத் தெரிவித்துள்ளார்.

---

## இலங்கையரல்லாதார் விபரங்கள்

### வருமானவரி இலாகா நடவடிக்கை

கொழும்பு, மே 16

அரசாங்க சேவையிலுள்ள இலங்கையரல்லாதாருடைய வேலை முடிவுக்காலத்தை அறிவிக்குமாறு உள்நாட்டு வருமானவரி இலாகா, சம்பந்தப்பட்ட சகல அரசாங்க இலாகாக்களையும், ஸ்தலஸ்தாபன சபைகளையும் அரசாங்க கூட்டு ஸ்தாபனங்களையும் கேட்டுள்ளது.

இவர்களிடமிருந்து வரவேண்டிய வருமானவரியை இவர்கள் இந்நாட்டைவிட்டுப் போகுமுன் அறவிடுவதற்காகவே இவ்விபரம் தேவைப்படுவதாக கமிஷனர் திரு எல். ஜி. குணசேகரா அதில் தெரிவித்துள்ளார்.

வருமானவரி சட்டம் 55 முதலாம் பிரிவின்கீழ் வருமானவரி செலுத்தவேண்டிய சகலரிடமிருந்து முழுவிபரங்களையும் தருமாறு வருமானவரிஇலாகா கேட்டுக்கொண்டிருக்கிறது.

---

## ஷோம்பே

நியூயோர்க், மே 16

கடாங்கா தலைவர் ஷோம்பேயைக் காவலில் வைத்திருப்பது பற்றி ஐ. நா. பொதுக் காரியதரிசி திரு. ஹமர்ஷீல்ட் காங்கோ அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டார். திரு. ஷோம்பே, ஐ. நா. பொதுக் காரியதரிசிக்கு ஒரு செய்தியை அனுப்பியிருப்பதாய் நியூயோர்க்கில்அறிவிக்கப்பட்டது. ஷோம்பேயின் விடுதலைக்கு வழிசெய்யுமாறு பிரதம காரியதரிசியை பிரிட்டன் கேட்டிருப்பதாயும் கூறப்பட்டது.

---

## கைக்கடிகாரத்தை திருடியதற்கு கடுங்காவல் தண்டனை

களுத்துறை, மே 16

நூறு ரூபாய் மதிப்புள்ள 'ரோமர்' கைக்கடிகாரத்தை திருடிய குற்றத்துக்காக, எல்பிட்டியாவைச் சேர்ந்த எபேஜ் டேனியல் என்பவருக்கு களுத்துறை நீதிபதி திரு. ஈ. ஓ. எவ். டி' சில்வா இரண்டு வருடக் கடுங்காவல் தண்டனை விதித்து பொலிஸ் கண்காணிப்பில் மேலும் இரண்டு வருடம் இருக்கும்படியும் உத்தரவிட்டுள்ளார்.

## கந்தையா நினைவு மலர்

உடுப்பிட்டி, செவ்வாய்

முன்னைநாள் பருத்தித்துறை எம். பி. திரு. பொன் கந்தையாவின் குணசீலப் பண்புகளையும், சேவைகளையும் அரசியல் ஞானத்தையும் நினைவு கூரும் நோக்கமாக அவர் இறந்ததினமாகிய செப்டம்பர் 8-ந் திகதி ஒரு நினைவு மலர் வெளியிடவிருப்பதாகத் தெரிகிறது. இம்மலரில் இலங்கை அரசியல் தலைவர் பலரது கட்டுரைகளும், கவிஞர் பலரின் கவிதைகளும், திரு. கந்தையாவின் பார்லிமெண்ட் விரிவுரைகளிற் சில பகுதிகளும் வெளியிடப்பெறும்.

## 4 நாள் கழித்து சென்ற தந்தி மணியோடர்!

அநுராதபுரம், மே 16

அநுராதபுரம் தபால் கந்தோரிலிருந்து, மாத்தளையில் வசிக்கும் தனது மனைவிக்கு அனுப்பிய தந்தி மணியோடர் ஒன்று நான்குநாட்கள் கழிந்த பின்பே கொடுக்கப்பட்டுள்ளது." என்று ஆர். உப்பாலி தொறனகம என்பவர் நிருபர் ஒருவரிடம் தெரிவித்துள்ளார்.

இங்கு கொடுக்கப்படும் தந்திகள் உரியவர்களுக்கு, அந்த நாளிலோ அன்றி அடுத்த நாளோ கொடுக்கப்படுவது இல்லை என்றும் வழக்கமாக தந்திகள் தபாலில்தான் அனுப்பப்பட்டு வருவதாகவும் தெரிகிறது.

அண்மையில் கிறிகல்லெவ என்ற தபால் கந்தோரில் பதிவு செய்யப்பட்ட கடிதமொன்று, முத்திரைகள் ஒட்டப்படாத நிலையில் இங்குள்ள படம் பிடிக்கும் நிலையமொன்றுக்கு கிடைத்துள்ளது.


5-வது வெற்றி வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெம்பிளி (கண்டி)

மற்றும் 8 திரைகளில்

மாலை 6 — இரவு 9-30 மணி

எஸ். எஸ். ராஜேந்திரன்

பி. சரோஜாதேவி, தங்கவேலு

மற்றும் பலர் நடித்த



மணப்பந்தல்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

காலை 10 மணிக்கும் 2மணிக்கும் இருகாட்சிகள்



எஸ். எஸ். ராஜேந்திரன் - பண்டரிபாய் நடித்த

அன்பு எங்கே

மனோஹரா (யாழ்ப்பாணம்)

2-15 மணிக்கு ஒரே காட்சி

ஜெமினிகணேசன் - சாவித்திரி நடித்த

மணமாலை


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு மே மாதம் 17 ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.